செ.வெ.எண்: 65 நாள்: 24.06.2016

## சித்தர் பெருமான்கள் வழங்கிய அறிய பொக்கிஷமே "சித்த மருத்துவ முறை" ஆகும்-மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட சித்த மருத்துவ பிரிவின் சார்பில் அரசு அலுவலர்களுக்கான இலவச சிறப்பு சித்த மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.06.2016) நடைபெற்றது.

இந்த சித்த மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து, அரசு அலுவலர்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கி கூறியதாவது.

சித்த வைத்திய முறை என்பது பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சித்தர்கள் நம்மை சுற்றியுள்ள மருத்துவ குணம் உள்ள தாவரங்களை அடையாளம் கண்டு நோய்களுக்கு மருந்தாக்கி கொடுத்து குணப்படுத்தியுள்ளனர். உண்ணும் உணவுப பொருட்களை மருந்தாக்கி வழங்கியும் நிலத்திலும், நீரிலும் வாழக்கூடிய உயிரினங்களை மருந்தாக்கி கொடுத்தும் அனைத்து நோய்களுக்கு தீர்வு கண்டு, அவர்கள் அறிந்ததை பிற்கால சமுதாய மக்களுக்கும் பயன்படும் என்றும் அறிந்து ஓலைச் சுவடிகளில் எழுதிவைத்து மறைந்தும், மறைந்திருந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சித்தர் பெருமான்கள் வழங்கிய அறிய பொக்கிஷமே "சித்த மருத்துவ முறை" ஆகும்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (24.06.2016) நடைபெற்ற மாவட்ட சித்த மருத்துவ பிரிவின் சார்பில் அரசு அலுவலர்களுக்கான சிறப்பு சித்த மருத்துவ முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கிவைத்து, சித்தா மருந்துகளை முகாமில் கலந்து கொண்டோர்களுக்கு வழங்கினார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சித்த மருத்துவத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழக அரசு பொதுமக்களின் உடல்நலனை பேணி பாதுகாக்கும் வகையில் இலவச சித்த மருத்துவ முகாம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கான இலவச சித்த மருத்துவ முகாம் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த சித்த மருத்துவ முகாமில் 300க்கும் மேற்பட்ட அரசு அலுவலர்கள் பங்கேற்று பொது மருத்துவம், தோல் மருத்துவம், இரத்த அழுத்த மருத்துவம், சர்க்கரை நோய் சிகிச்சை, கை,கால் மூட்டு வலிக்கான சிகிச்சை , ஆத்துமா நோய்களுக்கான சிகிச்சை, வயிற்று புண்களுக்கான சிகிச்சை போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கு சிறப்பு சிகிச்சைகளும் மற்றும் நிலவேம்பு குடிநீரும் வழங்கப்பட்டது. எனவே இது போன்று நடைபெறும் மருத்துவ முகாம்களில் அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு பயனடைய வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, இணை இயக்குநர்(பொ) (ஊரக மற்றும் சுகாதார நலப் பணிகள்) மரு.சையதுமொய்தீன், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.காமராஜ், சித்த மருத்துவர்கள் மரு.சங்கீதா, மரு.வாரிஜா, மரு.மாமுண்டி, மரு.அமுதமீனா, மரு ஜெகநாதன், இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.கிருஷ்ணராஜ், மருந்தாளர்கள் திருமதி.சித்ரா, திரு.சுப்பையா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.